## சி.சு.செல்லப்பா

| | | |
|---|---|---|
| ஊர் | - | சின்னமனூர் (தேனி மாவட்டம்) |
| காலம் | - | 29.09.1912 முதல் 18.12.1998 வரை |
| இயற்றிய நூல்கள் | - | இயற்றிய நூல்கள் - மாற்று இதயம் (கவிதைத் தொகுப்பு), சரசாவின் பொம்மை, மணல்வீடு, அறுபது, சத்தியாகரசி, வெள்ளை சிறுகதை என்ற ஐந்து தொகுதிகள், வாடிவாசல், ஜீவனாம்சம், சுதந்திரதாகம், நீ இன்று இருந்தால், புதுக்குரல் |
| சிறப்புப் பெயர் | - | புதுக்கவிதை புரவலர் |

**சிறப்புகள்:**

- மதுரைக் கல்லூரியில் பி.ஏ. இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர் - சி.சு.செல்லப்பா
- 1947 - 1953 வரை தினமணிக் கதிரில் பிரபல எழுத்தாளர் துமிலனுக்கு உறுதுணையாக பணியாற்றியவர் - சி.சு. செல்லப்பா
- 1958 எழுத்து இதழை தொடங்கியவர் - சி.சு. செல்லப்பா
- சுதந்திர சங்கு என்ற இதழில் முதல் முதலாக எழுதத் தொடங்கியவர் - சி.சு. செல்லப்பா
- மணிக்கொடி என்ற இதழ் இவரின் படைப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியது.
- சிறந்த எழுத்தாளராக சி.சு. செல்லப்பாவை அறிமுகப்படுத்திய சிறுகதை - சரசாவின் பொம்மை
- மணிக்கொடி கலாமோகினி இதழ்கள் நின்று போனதால் மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு உறுதுணையாக நின்ற இதழ் - எழுத்து (119 இதழ்கள் மட்டுமே வெளிவந்தன)
- தமிழ்ச் சிறுபத்திரிகளின் முன்னோடி இதழ் - எழுத்து.
- **புதுக்கவிதை:** மாற்று இதயம்
- **சிறுகதைகள் :** சரசாவின் பொம்மை, மணல்வீடு, அறுபது, சத்தியாகரசி, வெள்ளை என்ற ஐந்து தொகுதிகள்.
- **நாவல் :** வாடிவாசல், ஜீவனாம்சம், சுதந்திரதாகம்
- **விமர்சனம்:** தமிழ் இலக்கிய விமர்சனம், தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- **குறுங்காவியம்:** இன்று நீ இருந்தால் (மகாத்மா காந்தி பற்றிய காவியம்)

## தருமு சிவராமு

| | | |
|---|---|---|
| பெயர் | - | தரு.மு. அருப் சிவராமு |
| சிறப்புப் பெயர்கள் | - | பிரமிள், பானுசந்திரன், அரூப் சிவராம் |
| ஊர் | - | திருகோணமலை (இலங்கை கிழக்கு மாகாணம்) |
| காலம் | - | 20 - 04 - 1939 |
| இயற்றிய நூல்கள் | - | புதுக்கவிதை, கவிதை, விமர்சனம், சிறுகதை, ஓவியம், சிற்பம் |
| விருதுகள் | - | கும்பகோணம் நீலக்குயில், புதுமைப்பித்தன் வீறுவிருது, நியூயார்க் விளக்கு அமைப்பின் புதுமைப்பித்தன் விருது |

**சிறப்புகள்:**

- பாரதி புதுமைப்பித்தனுக்கு பிறகு தோன்றிய இலக்கிய மேதை - தருமு. சிவராமு
- எழுத்து பத்திரிக்கையின் மூலம் எழுதத் துவங்கிய பிரமிள் நவீன தமிழுலகில் தனக்கென தனி இடம் பிடித்தார்.
- ஓவியம், சிற்பம், நாடகம், மொழியாக்கம் என பலத்துறைகளில் புலமைப் பெற்றவர் - தருமு. சிவராமு
- மௌனியின் கதைத் தொகுப்பிற்கு இளம் வயதிலேயே முன்னுரை எழுதியவர் - தருமு. சிவராமு
- கவிதைக் கோட்பாடுகளும் பாரதிக்கலையும் எனும் கட்டுரை எழுதியவர் - தருமு. சிவராமு

**எழுதிய நூல்கள்:**

- **குறுநாவல்கள்:** ஆயி (1990), லங்காபுரி ராஜா, பிரசன்னம்
- **நாடகம் :** நட்சத்திரவாசி -1993
- **பிறநூல்கள்:** கைப்பிடியளவு கடல் - 1976, தமிழின் நவீனத்தத்துவம் 1986, மீறல் - 1993, மார்க்சும் மார்க்ஸீயமும் - 1999, பீட்டர் ஓர்ஸ்லி, மேல் நோக்கிய பயணம்-1980, பாதையில்லாப் பயணம், வெய்யிலும் நிழலும் (இலக்கிய விமர்சனக் கட்டுரை), யாழ் கவிதைகள், காலவெளிக் கவிதை (அறிவியல் கட்டுரை), பிரமிள் கவிதைகள், தியானதாரா, வானமற்றவெளி, விடுதலையும் கலாச்சாரமும், விமர்சன ஊழல்கள், விமர்சன மீட்சிகள், விமர்சனாஸ்வரம், ஸ்ரீலங்கா -வின் தேசியத் தற்கொலை.

**புகழுரை:**

- பிரமிள் விசித்திரமான படிமவாதி எனக் கூறியவர் - சி.சு. செல்லப்பா
- உரைநடையின் அதிக பட்ச சத்தியத்தை நிறைவேற்றியவர் தருமு சிவராமு எனக் கூறியவர் - சி.சு. செல்லப்பா
- தமிழின் மாமேதை பிரமிள் எனக் கூறியவர் - T. ஜானகிராமன்

## பசுவய்யா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சுந்தர ராமசாமி |
| காலம் | - | 30-05-1931 முதல் 14-10-2005 வரை |
| ஊர் | - | மகாதேவர்கோயில் (நாகர்கோயில் கன்னியாகுமரி மாவட்டம்) |
| மனைவி | - | கமலா |
| இயற்றிய நூல்கள் | - | ஒருபுளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்கா |
| சிறப்புப் பெயர் | - | பசுவய்யா, சிறந்த படிமக் கவிஞர் |

- நவீன தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர் மற்றும் கவிஞர் என்று பல பரிமாணங்களைக் கொண்டவர் - சுந்தர ராமசாமி
- தன் இளைமைப் பருவத்தில் சாந்தி என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் தொ.மு.சி. ரகுநாதனிடம் மிகுந்த ஆர்வத்தை கொண்டிருந்தவர் - சுந்தர ராமசாமி
- தொ.மு. சியினால் மார்க்ஸி தத்துவங்களிலும் ஈர்க்கப்பட்டவர் - சுந்தர ராமசாமி.
- தொ. மு. சி. ஆசிரியராக இருந்த சாந்தி என்ற பத்திரிகையில் கவிதை எழுதத் தொடங்கியவர் - சுந்தர ராமசாமி
- கனடாவின் தமிழ் இலக்கிய தோட்டம் என்ற அமைப்பு சுந்தர ராமசாமி பெயரில் தமிழ் கனிமைகான விருதுகளை வழங்குகிறது.
- நெய்தல் இலக்கிய அமைப்பு இளம் படைப்பாளிகளுக்கு சுந்தர ராமசாமி விருதினை ஆண்டுதோறும் வழங்குகிறது.

**புகழ் பெற்ற நாவல்கள் :**

- ஒரு புளியமரத்தின் கதை
- ஜே.ஜே. சில குறிப்புகள்
- குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

**கவிதை தொகுப்புகள்:**

- நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக
- இவருடைய கவிதைகளின் முழுத் தொகுப்பு 107 கவிதைகள் என்ற தொகுப்பில் வெளியாகியுள்ளது.

**சிறுகதைகள்:**

- அக்கரை சீமையில், தண்ணீர் அடைக்கலம், அகம், ஸ்டாம்பு ஆல்பம், லவ்வு, கைக்குழந்தை, பிரசாதம், செங்கமலமும் ஒரு சோப்பும், கிடாரி, பக்த துளசி, ஒரு நாய், ஒரு சிறுவன், ஒரு பாம்பு, லீலை, தயக்கம், பள்ளம், டால்ஸ்டாய் தாத்தாவின் கதை, அந்த ஐந்து நிமிடங்கள்

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

- மலையாளத்தில் தகழி எழுதிய செம்மீன், தேரோட்டியின் மகன் என்ற இரு நாவலையும் தமிழில் மொழி பெயர்த்தவர் -பசுவைய்யா

**விமர்சனக் கட்டுரைகள்:**

- ஆளுமைசர், மதிப்பீடுகள், காற்றில் கரைந்த பேராசை, வானகமே, இள வெய்யிலே, மரச்செறிவே

## கவிஞர் இரா.மீனாட்சி

- இயற்றிய நூல்கள்-உதய நகரிலிருந்து, நெருஞ்சி, தீபாவளிப் பகல், மறுபயணம், மீனாட்சி கவிதைகள், வாசனைப் புல், கொடிவிளக்கு, செம்மண் மடல்கள், பறத்தல் அதன் சுதந்திரம், சுடு பூக்கள்
- கவியோகி சுத்தானந்த பாரதி தலைமையில் 1982 ல் நடந்த கவி அரங்கில் கவிதைப் பாடியவர் - இரா. மீனாட்சி
- சி.சு. செல்லப்பாவின் எழுத்து காலத்தில் இருந்து எழுதத் தொடங்கி இன்று வரை தொடர்ந்து எழுதி வருகிறார்
- 1978 ல் கோவை அவினாசியில் உள்ள அரசு உயர்நிலை பள்ளியில் முதன் முறையாக பாரதி சிலை வைக்க அரசாணை பெற்று சிலை நிறுவி பாரதியார் நூற்றாண்டு விழாவை நடத்தினார்.
- ஐ.நா. அமைப்பின் யுனெஸ்கோ (UNESCO) பங்களிப்போடு தமிழ் மரபு, கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழி பாதுகாப்பு ஆகியவைகளில் இளைஞர்களுக்கு நெறியாளராக பணியாற்றியவர் - இரா. மீனாட்சி
- 2006 மார்ச் ல் ஆப்பிரிக்க இந்திய இளைஞர்களுக்கு இடையே நட்புறவு பாலமாக ஆரோவில் இளைஞர்கள் கல்வி மையத்தை உருவாக்கினார்.
- 2008ல் சாகித்ய அகாடமியுடன் இணைந்து வருங்கால கவிதையும் கவிதையின் வருங்காலமும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியவர் - இரா. மீனாட்சி
- நவீனத் தமிழ் இலக்கியத்திலும் புதுக்கவிதைப் படைப்பிலும் குறிப்பிடத்தக்கவர் - இரா. மீனாட்சி
- தற்போது ஆரோவில் சர்வதேச நகரத்தில் தொண்டாற்றி வருகிறார்
- இவர் எழுதிய உதய நகரிலிருந்து என்னும் நூல் தமிழ்வளர்ச்சித் துறையின் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசினைப் பெற்றது.